1978 மார்ச் 9]

திரு. க. இரா. சின்னராசு : தர்மபுரி மாவட்டத்தில் ஊற்றங்கரை பஞ்சாயத்து யூனியனை இரண்டாகப் பிரித்து சாம்பல்பட்டி யூனியனை ஏற்படுத்த அரசாங்கம் பரிசீலிப்பதாகக் கூறப்படுகிறது. அது எப்போது பிரிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்தக் கருத்துரை ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரிடத்திலிருந்து அரசுக்கு வந்த பிறகு யோசிக்கப்படும்.

*474 Q.—THIRU K. KANDASAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state

(*a*) whether a resoultion was passed by the Panchayat Union, Andipatti, Madurai district and sent to the Government for the bifurcation of this Union into two viz., Andipatti Union and Kadamalaikkundu Panchayat Union as early as in 1968 ; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு தி. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிக்கும் கருத்து மதுரை மாவட்ட ஆட்சியாளரின் பரிசீலனையில் உள்ளது.

*475 வினு—திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தின் ஊராட்சிகளின் வளர்ச்சியைக் கருதி இரண்டாகப் பிரிக்கப்படுகின்ற கருத்து அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்த ஆணைகள் எப்போது பிறப்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

* 476 வினு—திரு. கா. வே. கந்தசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியம், பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியம், இவ்விரண்டையும் இணைத்து மூன்ருகப் பிரிக்கத் தீர்மானம் ஏதும் வந்துள்ளதா ?